உ

சைவ உலகும் தமிழ் உலகும்
ஏற்றிப் போற்றும்

# சிவராத்திரி புராணம் உரையுடன்

மூன்றும் பதிப்பு

சைவத் தமிழறிஞர்களின் மதிப்புரை

அறிமுகவிழா - திருக்கேதீச்சரம்
22—2—71

உ
சிவமயம்

வணக்கம்

சிவராத்திரி புராணம்
உரையுடன்
மூன்றும் பதிப்பு
வெளியிட்டமை குறித்து
சைவத்தமிழறிஞர்கள்
பலர்
மனமுவந்து மதிப்புரை
அளித்துள்ளார்கள்
அவற்றுள் சிலவற்றை
இங்கு தந்து,
மதிப்புரை அளித்த
சைவத்தமிழறிஞர்கள்
அனைவருக்கும்
திருவருள் பெருக
இறைவனை வணங்கி
வழுத்துகின்றேன்.

வணக்கம்

22-2-71 மு. கணபதிப்பிள்ளை

# உள்ளே


பெரிதும் போற்றற் பாலது

— வே: நாகலிங்கம் J. P. U. M.

சிவராத்திரி புராண வெளியீடு

ஓர் ஒப்பற்ற சிவபுண்ணியம்

— சி: சிவகுருநாதன் M. A.

பழமையும் புதுமையும் கலந்தமைந்த வெளியீடு

— வித்துவான் ந: சுப்பையபிள்ளை

சைவ உலகு ஊக்கம் அளிப்பதாக

— பண்டிதமணி சி: கணபதிப்பிள்ளை

நூலில் கருத்தை இறக்கிப் பயன்பெறுவோம்

— வித்துவான் க. கார்த்திகேயன் B. A.

தமிழ்த்தாய்க்கு நல்லணியாய்த் தந்தான்

— பண்டிதர் க: மயில்வாகனன்

அடியார்களுக்கு மகிழ்ச்சி தரும்

— பண்டித வ: நடராஜா

சிவனுக்கு ஓர் இரா

— வித்துவான் க: ந: வேலன் B. O. L.

சிவராத்திரி புராணப் பதிப்பு வாழ்த்துரை

— கு: முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

இத்தகைய நூல்கள் இன்றியமையாதன

— பண்டிதர் த: சுப்பிரமணியம்

நாவலர் வழிவந்த நற்பணி

— சைவப்புலவர் இ: செல்லத்துரை

# பெரிதும் போற்றற் பாலது

வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் J.P. U. M.
[ தலைவர், சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம் ]

நம் சைவசமய நூல்களுள் சிவராத்திரி புராணம் என்னும் நூல் ஒரு சிறந்த இடத்தை வகிக்கின்றது. இச் சீரிய புராணத்தை இயற்றியவர் வரத பண்டிதர் என்னும் புலவராவர். இவர் சுன்னுகத்தில் தோன்றியவர். இவர் செந்தமிழையும் வடமொழியையும் நன்கு கற்றுப் புலமை நிரம்பியவர். இவர் காலத்தில் இருந்த புலவர்களுள் மாதகல் மயில்வாகனப் புலவரும், நல்லூர் சின்னத்தம்பிப்புலவரும் பெரும் புகழ் வாய்ந்தவர்கள். இவர்கள் செந்தமிழ் மொழிக்கும் சைவசமயத்துக்கும் அரும் பெருந் தொண்டாற்றி வந்தார்கள். அக்காலத்தில் புலவர்கள் கூட்டங் கூட்டமாக பல இடங்களிலும் இருந்து அரும்சேவை செய்து வந்தார்கள்.

இத்தகைய சூழ் நிலையில் இவ்வரும்பெரும் புராணம் நம் புலவர் மணியவர்களால் இயற்றப்பட்டது. இதன் கண் சிவராத்திரி விரதமகிமையும் அதன் இயல்பும் கூறப்பட்டிருக்கின்றன. நாம் அனுட்டிக்கும் விரதங்களுள் சிவராத்திரி விரதம் முதன்மை வாய்ந்தது. அதன் பெருமையை மக்கள் அறிந்து கடைப்பிடித்து வீடு பேறடைய வேண்டுமென்னும் நல் எண்ணத்திஞல் உந்தப்பட்டே இப் புராணத்துக்கு உடுப்பிட்டி குமாரசூரியப்பிள்ளை அவர்கள் பிரமாதீச வருடம் தாமே சீரிய உரையெழுதி வெளியிட்டார்கள். அவ்வுரையின் இரண்டாம் பதிப்பு ஆங்கீரச

வருடத்தில் வெளிவந்தது. இங்ஙனம் இரு பதிப்புக்கள் வெளிவந்தும் மக்களால் இப் புராண மகிமை போற்றப் பட்டபடியால் அப்பதிப்புக்கள் விரைவில் செலவாயின. அதன் இன்றியமையாமையை உணர்ந்தே இப்போது அந் நூலின் மூன்றும் பதிப்பை மறவன்புலோ ஆசிரியர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள் வெளியிடுகின்றனர்.

இப்பதிப்பின்கண் ஆசிரியர் அவர்களால் பதிப்புரை, நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு முதலியன எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவை புராணத்தை நன்கு அறிவதற்கும், அதன் பெருமையை உணர்வதற்கும் உறுதுணையாயிருக்கின்றன.

இந்நூலை ஆசிரியர் அவர்கள் ஸ்ரீ காந்தா அச்சகத்தில் பதிப்பித்து வெளிப்படுத்துகின்றனர். இப்பதிப்பிலுள்ள சிறப்பைக் கூறுமலிருக்க முடியாது. அநேக பாடல்களைச் சீர்பிரியாமலும், கடினசந்திகளைச் சீர்படுத்தாமலும் அச்சிடுவதனுல் அவற்றைப் படிக்கும் மாணவர்கள் குறை கூறுவதை நான் நேரே கேட்டிருக்கிறேன். தாங்கள் அந் நூல்களை வாசிக்கவாதல் அவற்றின் பெருமையை அறியவாதல் முடியாமலிருப்பதை மாணவர்கள் அடிக்கடி முறையிடுகிருர்கள். அத்தகைய இடர்ப்பட்ட நிலையிலிருக்கின்றபடியால்தான் தாங்கள் நம் சமய நூல்களைப் படித்து அருமை பெருமைகளை அறியமுடியவில்லை என்கிருர்கள். அத்தகைய குறையினை இப்பதிப்பு நீக்கும் வகையில் பெரிதும் துணை புரிகின்றது. இப்பதிப்பு பாடல்களை உள்ளபடி முதலும், பின்பு அவற்றைச் சீர்பிரித்தும், கடினசந்திகள் நீக்கியும் பதிப்பித்திருப்பது பெரிதும் போற்றற்பாலது. இம்முறையே அண்ணுமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணப் பதிப்பும் வெளிவந்திருப்பதைக் கண்டு மகிழலாம்.

# சிவராத்திரி புராண வெளியீடு
# ஓர் ஒப்பற்ற சிவபுண்ணியம்

## திரு. சி. சிவகுருநாதன் அவர்கள் எம். ஏ.
[தலைவர், யாழ். தமிழ்நூற் பதிப்புக் கழகம்]

"சிவராத்திரி விரதஞ் சைவசமயிகள் யாவராலும் ஆவசியகம் அநுட்டிக்கத் தக்கது" என்று நாவலர் பெருமான் அறுதியிட்டு ஆணையிடுகின்றார்.

கந்தபுராண கலாசாரம் ஊறியமையினாற் போலும் ஈழ நாட்டிலே சிவராத்திரி விரதம் போல் வேறெவ் விரதமும் பரவலாக மிகப் பழங்காலந் தொட்டு எம் முன்னோரால் அநுட்டிக்கப்படவில்லை எனலாம்.

இச்சிவராத்திரியின் மகிமை பல நூல்களிற் பல புலவர்களாற் கூறப்பட்டுள்ளதெனினும், கந்தபுராணம் — தக்ஷகாண்டம் — அடிமுடி தேடிய படலத்தில் பிரமா தன் புதல்வனாகிய தக்கனுக்குச் செய்த உபதேசத்தில்

"அரியும் யானுமுன் றேடுமவ் வனற்கிரி யனல
கிரியெ னும்படி நின்றதா லவ்வொளி கிளர்ந்த
விரவ தேசிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தன ரன்னதோர் வைகலிற் பலரும்"

என்று கச்சியப்ப சுவாமிகள் சிறப்பாக விதந்தோதுவது சிறப்புடையதாகும்.

சிவராத்திரி விரதத்தின் மகிமைகளைச் சிறந்த முறையில் விரிவாக அறிய மக்கள் ஆவலுற்ற காலத்தில், எம் நாடு செய்த தவப்பயனால் இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னே யாழ்ப்பாணத்தில் அவதரித்த வரதராஜ கவிராசர் என்ற அந்தண குல திலகம் ''சிவ ராத்திரி புராணத்தைப்'' பாடி யளித்தார்.

வரதராஜ கவிராயர், யாழ்ப்பாணத்திலே மயில்வாகனப் புலவர், சின்னத்தம்பிப் புலவர் முதலியவர்கள் வாழ்ந்த காலத்துப் புலவர். இச்சிவராத்திரி புராணத்துக்கு அவர்கள் சிறப்புப் பாயிரம் பாடி வழங்கியுள்ளார்கள். ''...... விரதராச சிவநிசியின் நீள் சரிதம் மிக விளங்கிட விளம்பினான் ......... வரதராசன் மறைவாணராசன் மிக் மதுர ஆசுகவிராசனே'' என்று மயில்வாகனப் புலவரும், ''சித்தன் உயர் சிவநிசி மான் மியமதனைச் செந்தமிழாற் றெரித்தல் செய்தான் ........ காசிநகர் வரத பண்டிதன் முத்தமிழ் வல்லோனே'' என்று சின்னத் தம்பிப் புலவரும் மனமாரப் பரவியுள்ளனர்.

இந்நூல் அறிவுடை ஆன்றோர் ஆணைவழியே நின்று இயற்றப்பட்டது என்பதை நூலாசிரியரே நூலகத்துத் தற்சிறப்புப் பாயிரத்தில் அருளியிருக்கின்றார். ''தில்லை வனத்து அறிஞர் திருக்கடைக்கண் நோக்கி முந்த உரைத்தனர் பலரும் ஆயினும் நீ ஆகம நூல் மொழிவழாமல் பந்தம் அறுத்திடு சிவராத்திரி விரத சரிதை தனைப் பாடுக என ...... செப்பலுற்றேன்'' என்கின்றார்.

பல சிறப்புக்களெல்லாம் நிறைந்த புலவர் பெருமானால் இயற்றப்பெற்ற இந்நூல் பலவாண்டுகளுக்கு

முன்னர் உடுப்பிட்டி குமாரசூரியப்பிள்ளையின் அரிய உரை விளக்கம் பெற்று வெளிவந்தது. மேலும் சில ஆண்டுகள் கழித்துத் தும்பை நகர் பிரமஸ்ரீ. ச, சோமசுந்தர ஐயரவர்களால் மறு பதிப்புப் பெற்றுவெளிவந்தது.

இப்போது அதன் பிரதிகள் கிடைப்பது அரிதாகி விட்டது. இது பொதுவாக நம் யாழ்ப்பாணத்துப் பெரியவர்களின் நூல்களுக்கு உண்டாகும் ஒரு பரிதாபமான நிலை. நூல்கள் எத்துணைச் சிறப்பினவாயினும், எவ்வளவு புலமை பெற்றவர்களால் இயற்றப்பட்டனவாயினும், அவற்றைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினர்க்கு வழங்கும் இயல்பு எம்மவரிடத்தில் இல்லை. இக் காரணத்தால் ஈழ நாட்டில் இயற்றப்பட்ட அரிய பெரிய தமிழ் நூல்கள் பல அழிந்து ஒழிந்து மறைந்துவிட்டன.

இந்த அவல நிலை இவ்வருமருந்தன்ன சிவராத்திரி புராணத்துக்கும் நேரா வண்ணம் கைகொடுத்துதவமுன் வந்தார் சைவப்பெரியார் மு. கணபதிப்பிள்ளை அவர்கள். அன்னாருக்கு இந்நூலை வெளியிடுதல் போன்ற பணிகளுக்கு வேண்டும் பொருட் செல்வம் மிக்க தனவந்தர் வரிசையில் இடமில்லையாயினும், சைவப்பற்றும் தமிழ்ப்பற்றும் நிறைந்த புண்ணியவான்கள் வரிசையின் முதலிடம் நிச்சயமாக அவருக்கே உண்டு எனலாம். சிலவாண்டுகளுக்கு முன்னே, திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் சிவஞானபோதம் பாடஞ் சொல்லத் தொடங்கியபோது பாடங் கேட்க வந்த பெரியோர்கள் சிவஞானபோத நூற் பிரதியில்லாமல் இடர்ப்பட, மிகக் குறுகிய காலத்தில் நூலை அச்சிட்டதுமல்லாமல் பிரதிகளை இலவசமாகவும் வழங்கினார்கள். மேலும் பல அரிய நூல்களை இலவச வெளியீடுகளாக வழங்கி வருகின்றார்.

''சிவராத்திரி புராணத்தை'' அச்சேற்றி வெளியிட்ட திரு. மு. கணபதிப்பிள்ளை எமக்குச் செய்துள்ள பெரும் பணி மனமாரப் பாராட்டப்பட வேண்டியதாகும்.

இது போன்ற நூல்களை வெளியிடுபவர்கள் பெரும் பொருள் நட்டத்துக்குள்ளாகின்றனரென்பதையும், ஆன படியால் அவர்கள் ஒரு முறைக்கு மேல் ஒரு நூலையும் வெளியிடுவதில்லை என்பதையும் நேரிற் கண்டறிந்த திரு. கணபதிப்பிள்ளையவர்கள் அழகான அச்சுத் தாளில் 126—க்கு மேற்பட்ட பக்கங்களை பெரும் பொருள் செலவு செய்து அற்பவிலைக்கு வழங்க முன்வந்த துணிச்சலைப் பாராட்டாமல் இருப்பது எங்ஙனம் முடியும்?

இப்பதிப்பில் பல சிறப்புக்கள் உண்டு. செய்யுள்கள் முதலில் இலக்கண மரபுக்கமையவும், பின்னர் சந்திகள் பிரித்துஎளிமைப்படுத்தப்பட்டும்இருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளும் இங்ஙனம்இருமுறை அச்சிடப்பட்டமை செலவை அதிகப்படுத்துமாயினும், அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன் பெறல் வேண்டுமென்ற உயர் நோக்கத்தை விளக்குகின்றது. மேலும், முந்திய பதிப்புகளில் இடம் பெறாத நூலாசிரியர் வரலாறு, உரையாசிரியர் வரலாறு, செய்யுள்கள் முதற் குறிப்பகராதி, புராண படன விதி முதலியனவும் இப்பதிப்பில்இடம் பெற்றுப் படிப்போருக்கு பெரும் பயன் தருவனவாய் இனிது அமைந்துள்ளன. நூல் எவ் வகையிலும் பாராட்டத்தக்கதாய் அமைந்துள்ளமை மகிழ்ந்து போற்றற்குரியதாகும்.

23—2—71 இல் நிகழும் சிவராத்திரியை முன்னிட்டு வெளிவரும் இந்நூலை நாமெல்லோரும் வாங்கிப் படித்து மகிழ்வதோடு, திரு. கணபதிப்பிள்ளை அவர்களையும் ஆசீர்வதிக்கும்படி கருணாமூர்த்தியாகிய சிவபெருமானைத் துதிப்போமாக.

# பழமையும் புதுமையும் கலந்தமைந்த வெளியீடு

*[பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள்]*

இலங்கையின் வடபாலதாகிய யாழ்ப்பாண நாட்டிலே முருகப் பெருமான் உவந்தெழுந்தருளும் திருத்தலமாகிய மாவிட்டபுரத்தின் தென்றிசைக் கண்ணதாய், பெரும் புலவர் பரம்பரைக்கு உறைவிடமாய் விளங்குவது, சுன்னாகம் என்னும் நற்பதி. அதன்கண் ஒல்லாந்தராட்சிக்காலத்தில், சற்றேறக்குறைய இருநூற்றைம்பது வருடங்களுக்கு மூன் (கி. பி. 1656 — 1716) பிறந்து வாழ்ந்த பெரும் புலவர் வரதராசகவிராசர் என்பார்; அரங்கநாதையர் என்ற அந்தணருக்குப் புதல்வர். இப்புலவர்க்கு 'வரதராசர்' என்பது இயற்பெயராகவும், 'கவிராசர்' என்பது புலவருட் சிரேஷ்டர் என்பது பற்றி வழங்கிய சிறப்புப்பெயர் (விருதுப்பெயர்) ஆகவும் கொள்ளற்கு இடமுண்டு. 'வரதராசப்பெருமாள்' என்பது சில விஷ்ணு தலங்களில் எழுந்தருளி விளங்கும் திருமாலுக்குரிய பெயராதல் காணலாம். பிதாவின் பெயராகிய அரங்கநாதையர் என்பதும், திருமாலின் திருநாமத்தை உட்கொண்டு இடப்பட்ட பெயராகவே உள்ளது. ஆகவே, இவர் தாதை மூதாதையர்கள் திருமால் பத்தியுமுடையவராதலால் குறிக்கொள்ளத் தக்கதாகின்றது.

சொல்நயம், பொருள்நயம், சந்தநயம், அணிநயம், சுவைநயம், கற்பனு சாதுரியம், பத்திச்சுவை முதலிய கவித்துவநயங்கள் பொலிந்திலங்கக் கவிபாடுந் திறன்

நோக்கி க்'கவிராசர்' என்ற சிறப்புப் பெயர் வழங்குவ தாயிற்று. முழுப்பெயர் இதுவாயினும், ''நாம ஏகதே நேச நாமக்ரணம்'' என்ற நியாயப்படி, இவர் பெயர் 'வரத பண்டிதர்' எனவும் சுருக்கி வழங்கப்படுதலும் உண்டு.

இப்புலவர், வேதாகமாதி வடநூல்களையும், தமிழி லக்கண இலக்கியங்களையும் சித்தாந்த சாத்திரம் திரு முறைகளையும் நன்கு பயின்ற புலவராயினும் வாழவும் சாவவும் பாடவல்லவராய் இருந்தமைபற்றி வரகவி யெனவும் வழங்கப் பெறுவர்.

இவரியற்றிய நூல்கள், அவர் காலத்துக்கு தேவைக்கு இயையக் கடவுள் துதிகளாகவும், கடவுள் வழிபாட்டின் சிறப்புக்குதவும் விரத மகிமைகளை உலகிற்கு விளக்கி, அவற்றை அநுட்டித்தற்குரிய தூண்டுகோலாய் விரத நெறிமுறைகளை விளக்கும் சைவநூல்களாகவும், மக்கள் யாவருக்கும் பயன்தரத்தக்க மருத்துவ நுட்பங்களை விளக்கும் நூலாகவும் அமைந்துள்ளன. அவற்றுட் பிள்ளையார் கதை என்பது, கல்வியறிவில்லாதவரும் கற் றும் கேட்டும் பயன் கொள்ளற்குரியதாய்ச் சிவபுரா ணங்கள் பல வற்றிற் கூறப்பட்ட விநாயகர் மகிமை வழிபாடுகளின் சாரமாய் அமைந்த லலித நடை வழக் குப் பொருந்திய நூலாகும். அதனைச் சைவமக்கள் வரு டந்தோறும் மார்கழிமாதத்தில் வரும் விநாயகர் சஷ்டி விரதகாலமாகிய இருபத்தொருநாளிலும், படித்தும், கேட்டும் தம் விரத நியமங்களைப் பத்தி சிரத்தையுடன் அநுட்டித்து வருகின்றதைக் காணலாகும்.

''சிவராத்திரி புராணம்'' ஆகிய இந்நூல் மகாசிவ ராத்திரி விரததினம், உத்தமோத்தம சிவவிரத புண்ணிய தினமாகிய வரலாறும், அவ்விரத அநுஷ்டிப்பினால் உண்டாம் பெரும்பலன்களையும், சிவராத்திரி' மகாசிவ

ராத்திரி, யோகசிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாச சிவராத்திரி, பக்க (பக்ஷ) சிவராத்திரி என்று ஐவகைப் பட்டிருத்தலையும், அவற்றைக் கைக்கொண்டு அநுட்டிக்கும் முறைகளையும், அவ்வவற்றின் பலன்களையும், சைவாகமங்களிற் கூறப்பட்ட முறைப்படி விரித்து விளக்குகின்றது. அவ்விரதங்களை அநுட்டித்துப் பேறுகள் பெற்ற முன்னோர்களின் சரிதைகளையும் விரித்து விளக்குகின்றது.

இச்சிவராத்திரி புராணத்தை மகாசிவராத்திரி விரத புண்ணிய காலத்தில் ஆலயங்களிலும், வீடுகளிலும் சைவமக்கள் பத்தி சிரத்தையுடன் படித்தும் கேட்டும் பயன் பெறும் வழக்கம் முற்றொட்டு இது காலம் வரையில் நடைபெறுகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த இப்புராண நூல் உரையுடன் முன்பு வேறு இருவரால் இரு பதிப்புக்கள் வெளிவந்துள. அவற்றை இக்காலத்திற் பெற முடியாதவர்கள் கந்த புராணத்தினுள்ள ''அடிமுடிதேடு படலத்தை'' விரத காலத்தில் படித்தும், கேட்டும் வருவதையும் அறிகிறோம். சிவராத்திரிபுராணவுரை கிடைக்கப்பெறாத குறை நீங்குதலையே இலட்சியமாகக் கொண்டு, ஆசிரிய பதவிக்கடனை நிறைவேற்றி ஒய்வுபெற்றுள்ள, மறவன்புலோ திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் இப்பொழுது தாம் மூன்றாம் பதிப்பாக வெளிவர அச்சிடுவித்து உபகரித்துள்ளார்.

தமிழ்க் கல்வியறிவிற் குறைந்தவர்களும், அதனை வளர்க்க விரும்புபவர்களும், இலக்கியச் சுவை (காவியச் சுவை) களை நுகர்ந்து இன்புற விரும்பும் எவரும் படித்து விளங்கிப் பயன் பெறத்தக்க வகையில் செய்யுட்களெல்லாவற்றையும் சந்தங்கெடாமல் இசையுடன் புராண படன மனனபாடங்களைச் செய்வதற்கு ஏற்பச் சந்தி பிரிக்காமலும், அவற்றிற்கு அநுசரணையான பொருள் விளக்கம் உதிப்பதன் பொருட்டு அச் செய்யுள் ரூபக்கடின சந்தி பிரித்துச் செய்யுள் வடிவாகப் பதவுரைக்கு முற்

படக் காட்சியளிக்கவும் தக்கனவாகப் பழமையும் புதுமையும் கலந்தமைந்த வெளியீடாகப் பதிப்பித்துளர். இம்முறை "பாடங்கருத்தே சொல்வகை சொற்பொருள்" என்று நன்னூலில் கூறப்பட்ட பதினொன்கு வகையாக உரைக்கப்படும் உரைவகையுள் "சொல்வகை" என்ற உரையைத் தழுவிய முறையாகும் எனலாம்.

இவர் செய்த இந்நன்றிக்குப் பொதுவாகத் தமிழுலகமும், சிறப்பாகச் சைவவுலகமும், போற்றி இந்நூலை ஆதரிக்கும் நன்றிக் கடப்பாடு உடையதாகின்றது.

முற்றும்.

# சைவ உலகு ஊக்கம் அளிப்பதாக

[ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ]

ஒரு காலத்தில் தமிழ் நாடு முழுவதிலும் விஜயம் செய்து, ஆயிரக் கணக்கில் பிரசங்க மழை பொழிந்து வரும் செட்டி நாட்டில் செட்டி நாட்டு ராசாக்களின் மதிப்பைப் பெற்று மிக்க கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தவரும், இப்பொழுது மிக மெலிந்து தனித்து ஒடுங்கிக் கொண்டிருப்பவருமான பண்டித சிரோரத்தினம் வ. மு. இரத்தினேசுவரையர் சிவராத்திரி புராணம் பாடிய வரதராச பண்டிதரின் வழித் தோன்றல்.

வெகு காலத்துக்கு முன்னமே காசியிலிருந்து வந்து சுன்னாகத்தில் வசித்த பாரத்துவாச கோத்திரத்துப் பிராமணோத்தமர் ஒருவரின் வழித் தோன்றல் வரதராச பண்டிதர்.

யாழ்ப்பாணத்துத் தலைசிறந்த புலவரான சின்னத்தம்பிப் புலவரும் மற்றொரு சிறந்த புலவரான மாதகல் மயில்வாகனப் புலவரும் சிவராத்திரி புராணத்தை மதித்துச் சிறப்புப்பாயிரம் செய்திருக்கின்றார்கள்.

சிவராத்திரி புராணம் சிவராத்திரி காலத்தில் கோயில்களிலும் வேறு புண்ணியத்தானங்களிலும் பேணிப் படித்துப் பொருள் சொல்லப்பட்டு வருகின்றது. பல்லாயிரக் கணக்கானவர்கள் விரதம் அநுட்டித்துப் புராணங் கேட்டு ஆத்ம சாந்தியடைகின்றார்கள்.

சில பக்குவான்மாக்கள் ஆத்ம முனைப்பு அடங்கி திருவருளின் தூண்டுதலுக்கு ஆட்பட்டுப் பேயொன்றுந் தன்மை பிறந்து, தம் செயலுக்குத் தாம் பொறுப்பின்றி தாம் செய்யுஞ் செயலை தாமறியாமலே செய்து, செயலனைத்துஞ் சிவபுண்ணியமாய் வீடு பேறெய்துகின்றன. அவை செய்யும் வினை நல்வினையுமன்று; தீவினையுமன்று; சிவ வினை. இரகசியம் நம் புத்திக் கெட்டாதது; சிந்தனைக் குரியது.

''ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பானளவில்லை கிளக்கவேண்டா'' என்பது சம்பந்தப் பெருமானின் திருவாக்கு

சிவராத்திரி புராணத்தில் சுகுமாரன் கதையும் அது போல்வனவும், முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பூர்வ ஜன்ம வரலாறு, கண்ணப்பர் வரலாறு போன்றவைகளோடு சேர்த்துச் சிந்திக்கப்பாலனவாம்.

ஆத்மமுனைப்படங்காதநாம்செய்த செய்கின்றசெய்யும் பாவங்களனைத்தும் சிவராத்திரி நித்திரை விழிப்பால் தீர்ந்து போம் என்று தீர்ப்புச் செய்து விடக் கூடாது.

மிக்க சிந்தனைக்குரியதும் நம்மைப் பரிசோதித்துச் சுத்தி செய்தற்குபகாரமானதுமான சிவராத்திரி புராணத்தை உரையுடன் நல்ல முறையில் அச்சிட்டு. தமதுசஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு வெளியிட்டிருக்கிறார் ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் திரு. மு. கணபதிப்பிள்ளை. இவர் தெய்வ பக்தியும் நற்பண்பும் வாய்ந்த புண்ணிய சீலர் இவரியல்பு சமயச் சார்பான இலவச வெளியீடுகளால் சைவ உலகு முன்னமே அறிந்தது.

ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் என்றும் இளமையோடிருந்து நல்ல காரியங்களைச் செய்தற்குச் சைவ உலகு ஊக்கம் அளிப்பதாக.

# நூலிற் கருத்தை இறக்கிப் பயன் பெறுவோம்

[வித்துவான் க. கார்த்திகேயன் அவர்கள் B. A.]

சிவநெறிச் செல்வர்களுக்கு எதிரேவருஞ் சிவராத்திரித் திருநாளைச் சிறந்த முறையில் அநுட்டிப்பதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது. சிவராத்திரி புராணம் மூலமும் உரையும் மூன்றாவது பதிப்பு வெளிவருகின்றது. தேவாரம் திருவாசகம் கந்தபுராணம் முதலிய அருள் நூல்கள் உளவேனும் ஓரிரா முழுவதும் சிவத்தியானம் ஊக்கத்தோடு நடைபெறச் சிவராத்திரி புராணம், மிகவும் பொருத்தமானது என்பது எல்லாரும் ஒத்துக்கொள்ளும் உண்மையாகும். சிவராத்திரி புராணம், சிவராத்திரி விரதத்தின் மகத்துவத்தையும் அவ்விரதத்தை அநுட்டித்துப் பேறு பெற்றவர்களின் சரிதைகளையும் எடுத்து நுவல்கின்றது.

ஆண்களும் பெண்களும் எழுத வாசிக்கப் பழகி இருக்கும் இக்காலத்தில் பாட்டு வடிவத்தில் இருக்கும் இப்புராணத்தைப் படித்து விளங்க உரையுங் கிடைத்துள்ளது சைவ மக்கள் செய்துள்ள புண்ணியமாகும். இப்போது வெளிவரும் மூன்றாவது பதிப்பு புதிதாக ஒரு சிறப்புக் கொண்டுவிளங்குகின்றது. ஒவ்வொரு பாட்டுக்குக்கீழேயும் அப்பாட்டு, சந்தி பிரித்து இலகுவாக்கித் தரப்பட்டுள்ளது. தமிழறிவு கூடினவருக்கும், மட்டமானவருக்கும், குறைந்தவருக்கும் — அதாவது எல்லோருக்கும் — தத்தம் ஆற்றலுக்கேற்ப காலத்தை வீண்போக்காது நூலிற் கருத்தை இறக்கிப் பயன்கொள்ளத்தக்க முறையில் மூன்றாம் பதிப்பு

வெளிவருவது நாம் எல்லோரும் பாராட்ட வேண்டிய தொன்றாகும்.

சிவ விரதங்களுள் ஒப்பற்றதாய் விளங்கும் சிவராத்திரி குறித்து, யாழ்ப்பாணத்தவர் — முன்னுள்ளோரும் இப்போதுள்ளோரும் — கடைப்பிடித்துவரும் சீரிய கருத்து மிகவும் பாராட்டற்பாலதாகும். சிவராத்திரி விடயமாகப் படித்துத் தியானம் செய்ய ஒரு நூல் இல்லாத குறையை உணர்ந்து சுன்னுகத்துப் பிரமஸ்ரீ. வரதபண்டிதர் அவர்கள் சிவராத்திரி புராணத்தைப் பாடித் தந்து போனார்கள்.

அச்சுவேலியில் பிறந்து உடுப்பிட்டியில் வாழ்க்கை நடாத்திய பண்டிதர் குமாரசூரியப்பிள்ளை நூலுக்கு நல்லுரை வகுத்துச் சென்றார்கள். இவர்கள் இருவரதும் முயற்சியையும், சேவையையும் சுன்னுகம் குமாரசாமிப் புலவரவர்கள் முன்னமே பாராட்டியுள்ளார்கள்.

இப்போது வெளிவரும் மூன்றுவது பதிப்பை இளைப் பாறிய ஆசிரியரும் ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை உரிமையாளருமாகிய ஸ்ரீமத். மு. கணபதிப்பிள்ளை அவர்கள் வெளியிட்டு உதவியுள்ளார்கள். ஞான நூல்களை வெளியிடும் விஷயத்தில், சைவநன் மக்களின் வேண்டுகோளைப் பொருட்படுத்தி ஊதிபத்தை நோக்காது பிள்ளை அவர்கள் தம் அச்சகத்தில் பல நூல்களைப் பதிப்பித்து நல்கி உதவினார்கள். இப்பெருஞ்செயலுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம்.

முன்னர் இப்பெரியார் சிவஞான போதத்தை மெய்கண்ட தேவரின் பொழிப்புரை உதாரணச் செய்யுள்களோடு பதிப்பித்துச் சைவநன்மக்களுக்கு வழங்கியதைக் கண்டு பாராட்டினேம். இம்முறை சிவராத்திரி புராணத்தை நல்ல முறையில் அச்சிட்டு உதவியுள்ளார்கள். எல்லோரும் இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுவோமாக.

---

# தமிழ்த்தாய்க்கு நல்லணியாய்த் தந்தான்

பண்டிதர் க. மயில்வாகனன் அவர்கள்

கங்கையொடு மதிபுனைந்த கண்ணுதலோன்
உயிரனைத்துங் கட்டு நீங்கிப்
பொங்குமருள் பெற்றின்பப் புதுவாழ்வு
பெறுகவெனப் பொருந்தத் தந்த
துங்கமிகு சைவமொடு செந்தமிழும்
வளர்ந்தோங்கத் துயர்தீர் நாடு
செங்கயல்பாய் கழனிதொறுஞ் செஞ்சாலி
வளங்காட்டும் யாழ்நா டென்ப. 1

இன்னதிரு நாட்டின்கண் இருந்தமிழைச்
சைவத்தை இதயக் கோயில்
மன்னவைத்துப் பணிபுதுக்கி மரபுகெடா
வகைபுரந்து வளர்த்து நின்ற
நன்னயமார் புலவோரை யீன்றுதிகழ்
நற்பதிதான் நவிலுங் காலைத்
தன்னிசையால் உலகளந்த சுன்னையெனச்
சாற்றுவராற் றக்கோர் வாழி. 2

அப்பதியில் நான்மறையா றங்கமுணர்
அமைதியினன் அந்தணாளன்
முப்போதுந் திருமேனி தீண்டியரற்
கருச்சனைதான் முறையாய்ச் செய்வோன்
தப்பேதும் பயின்றறியா அரங்கனெனுந்
தனித்தலைவன் தவத்தினாலே
இப்புவியில் வந்துதித்தான் வரதகவி
ராசனெனும் ஏந்தல் மன்னே. 3

முருகனருள் கொண்டுயர்ந்து முத்தமிழின்
துறைகடொறும் முயன்றே யுண்டு
வரதனெனுங் கலைமுகில்தான் சுன்னாக
வரையின்கண் எழுந்து மின்னிப்
பரசமய நெறிசாய்த்துச் சிவசமயப்
பயிர்வளரப் பரிந்து பெய்து
விரிவுதமிழ் நெஞ்சுடையார் வியந்தாடக்
கவிதைமடு நிறைத்த தம்மா. 4

கவியரசர் அவர்தாமுங் கனிதமிழிற்
பலநூல்கள் புனைந்தா ரேனும்
புவிமீதில் சிவநோன்பு பலவுள்ளும்
இமயம்போற் புகழான் மிக்க
சிவநிசியின் மாண்பனைத்துஞ் செகத்துள்ளார்
நன்கறிந்து சிறப்பாய் வாழ
நவமான புராணமொன்றும் நயந்தளித்தார்
நற்றவத்தோர் வாழ்த்த நாளும். 5

நண்ணியசீர்ப் புராணமிதை நற்றமிழர்
கோவில்தொறும் நியமத்தோடு
புண்ணியஞ்சேர் சிவநிசியில் ஒருங்கிருந்து
படித்தறிந்து பொருளுஞ் சொல்லி
எண்ணமெலாஞ் சிவனடிக்கே இருத்தினராய்
அருநோன்பை இயற்றி இந்த
மண்ணின்மிசை இட்டசித்தி வாய்த்தனராய்
இன்பினெடும் வாழ்வார் வாழி. 6

வரதனருள் புராணத்திற் குரைதானும்
மரபினொடும் வகுத்தே தந்தான்
விரதமொடு சீலமுடைக் குமாரசூரிய
னென்னும் விகிர்தன் தானும்
கருதுமதன் பிரதிகடாம் எவர்தமக்குங்
கிடைக்காத கவலை யுந்தப்
பெருகுமன்பாற் பின்னுமதை அச்சியற்றி
உதவுதற்காம் பெற்றி யெண்ணி. 7

பண்டையநல் இலக்கணநூல் மரபுநெறி
காத்தோம்பும் பற்றி னாலும்
மண்டுசிவ நிசிப்பெருமை சிற்றறிவோம்
மனங்கொளற்காம் மாட்சி ஓர்ந்தும்
தண்டாத கவிதைகளை முறைமையொடும்
தந்துபின்னர்க் கடினம் என்னக்
கொண்டசந்தி பிரித்தமைத்தே இறுதியினில்
உரையமைத்துக் குறிப்பு விஞ்ச. 8

நூல்புனைந்த ஆசிரியர் வரலாறே
நுவலுமுறை கண்டோர் செய்தி
சால்புடனே தொகுத்தொருங்கு தமிழ்த்தாய்க்கு
நல்லணியாய்த் தந்தான் யாரேல்
சால்கடொறுஞ் சங்கினங்கள் முத்தீனச்
சாலிபயன் உதவும் நல்ல
கோலவயல் நீடுமறவன்புலவாம்
நற்பதியின் குரிசி லாகி. 9

அன்புயர அருள்கெழும் ஐங்கரனின்
பதமலர்கள் அகத்திற் கொண்டு
பண்புடனே தனையடைந்தார் துயர்தீர்த்துப்
பலகலையின் பரிசும் தேர்ந்தே
இன்புமலி யாசிரியப் பணிபுரிந்திங்
கோய்வுகண்ட இனிய செம்மல்
நண்புமலி கணபதிப் பிள்ளை என்னும்
நாமனவன்; நாளும் வாழி. 10

# அடியார்களுக்கு மகிழ்ச்சிதரும்

பண்டித வ. நடராஜ அவர்கள்

விரதங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதியைத் தருவன. இந்த நன்னோக்கிலேயே விரதங்கள் யாவும் அமைந்துள்ளன. தாம் தாம் உபாசிக்கும் தெய்வங்களின் அநுக்கிரகத்தைப்பெற விரதங்கள் அடியார்களுக்கு மகா மருந்துகளாய் அமைந்துள்ளன.

விரதங்கள் பல; ஆயினும் அவற்றுட் சில மிக முக்கியமானவை. உதாரணமாக கந்தசஷ்டி முருக பத்தர்களுக்கு முக்கியமான விரதம். திருவெம்பாவை சக்தி உபாசகர்களுக்கு உகந்த விரதம். கந்தசஷ்டி முருகப் பெருமானின் நாமமாகிய 'கந்த' என ஆரம்பிப்பதுபோல சிவராத்திரி முழுமுதற் கடவுளாகிய எம்பெருமானின் பஞ்சாட்சரப் பகுதியாகிய 'சிவ' என ஆரம்பிக்கிறது. இது சிவராத்திரி விரதத்தின் மகிமையை உணர்த்தப் போதுமானது.

விரதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தத்துவத்தை உணர்த்த எழுந்தவை என்பர் அறிஞர். ஆனல் அவ்வவற்றுக்கு ஆதாரமான தத்துவப்பொருளை எல்லோரும் இலகுவில் அறிந்துவிட முடியாது. சிந்தனையின் அறிய முடியும் ஆகையால் அவ்வுண்மைகளை உள்ளடக்கி ஆன்று அவிந்து அடங்கிய அறிஞர்கள் அத்தத்துவ உண்மைகளை கதைகளாக்கி செய்யுள் ரூபமாக உலகுக்கு அளித்தனர்.

"சத்தியம் வெல்லும்; சத்தியம் வெல்லும் என்று சொல்லிச் சொல்லி நான் இளைத்து விட்டேன்; அதனை

உணர்வார் இல்லை; ஆகையால் அதனை பாரதக் கதை யாகச் சொல்ல முனைந்தேன்'' என்று வியாசர் கூறிய தாக அறிஞர்கள் கூறுவர். தத்துவப் பொருளை உணர மாட்டாத மக்கள் கதைகள் — புராணங்கள் மூலம் சில சில உண்மைகளை அறியலாம். காலகதியில் அவற்றின் தத்துவப் பொருளை அவர்கள் உணர முடியும். தத்துவ உண்மைகள் மனத்தால் உணரப்படுவன. ஆகவே, மனத் தைப் பழக்குவதற்காகப் புராணங்கள் எழுந்தன. அவற் றிலே புனைந்துரைகள் பல இருப்பினும் அவை நல்ல நோக்கத்துடன் எழுந்தவை.

சிவராத்திரி, மகா பிரளயகாலத்தை உணர்த்தும் தத்துவம் என்பர் அறிஞர். அதாவது எத்தனையோ பிற விகளை எடுத்து எடுத்துப் பழவினைப் பயனை நுகர்ந்தும் ஆன்மாக்களால் தம்பழவினைப்பயனை அநுபவித்து முடிக்க முடியாமையால் அவை இளைப்படைந்து விடுகின்றன. நாம் எடுத்துக்கொண்ட ஒரு கடமை முடியாவிட்டாலும் நாம் அந்தக் கடமையை இடையில் விட்டுச் சிறிது இளைப் பாறுவது போலவும், இரவிலே துயில் கொண்டு ஆறுவது போலவும், தமது பிறவித் துன்பத்தைத் தொடர்ந்து அநுபவித்து இளைத்த உயிர்கள் சிறிது காலம் ஆறுதல் பெறவேண்டும் என்பதற்காகப் பிரளயகாலம் ஒன்று தோன்றுகிறது. அது உயிர்கள் ஆறுதலடையும் காலம். அது இரவாயிருப்பது பொருத்தமானதே. அத்தகைய அமைதியான ஒரு காலத்தையும் அக்காலத்து உயிர்கள் பெறக் கூடிய ஆறுதலையும் உணர்த்தும் அடையாளமாக உள்ளது சிவராத்திரி என்பர்.

சிவராத்திரியிற் சிவராத்திரியாகிய சிவநிசி, மிகப் புண்ணியமான காலம். அப்புண்ணிய காலத்து அபுத்தி பூர்வமாக வேனும் பூசைசெய்யும் பேறு கிடைப்பது மகா புண்ணியம். சிவராத்திரி காலத்தில் ஓர் ஆரணியத்தில்

அங்குலன் என்னும் பெயருடைய வேடனொருவன் இருந்தான். அவன் அக்காட்டிலுள்ள மான், மரை, முயல் முதலிய விலங்குகளை வரைவின்றிக் கொன்று புசித்துத் தன் மனைவி மக்களுடன் வாழும் நாளில், மாசி மாசத்துச் சிவராத்திரியன்று பகல் அம்பு, வில், கண்ணி என்னுமிவைகளை யெடுத்துக்கொண்டு மிருகங்களைக் கொல்லும் நோக்கமாகக் காட்டிற்குப் புறப்பட்டான். அப்பகல் முழுவதும் மிருகமேனும் பட்சியேனுந் தனக்கு அகப்படாமையினால், அங்குலன் மனம்வருந்தி, வெறுங் கையினனாய்த் தன் மனைவி மக்களிடம் மீண்டு செல்ல மனம் பொருந்தாது பெரும்பசி வருத்த அக்காட்டிற்றானே எங்கு மலைந்தான். இராக்காலஞ் சமீபித்தலும் அவன் ஒரு குளத்திற்கருகேயுள்ள வில்வமரத்திலேறி, தண்ணீர் குடிக்கும்படி ஆங்கு வரும் மிருகங்களைப் பதிவிருந்து கொல்லலாமென்னும் நோக்கத்துடன் அதன் மிசையிருந்தான். அங்ஙனமிருந்த அவ்வேடன், வில்வமரத்துள்ள பத்திரம் தன் அம்பின் செலவைத் தடுக்குமெனவஞ்சி, அப்பத்திரங்களைக் கொய்து கீழே போட்டுக்கொண்டிருந்தான். அவை அந்த வில்வ மரத்தின் கீழ் இருந்த சிவலிங்கப் பெருமானை அர்ச்சிக்கும் பத்திரங்களாயின; அதனால் அவன் பாவம் நீங்கிப் புண்ணியம் பெற்றான் என்னும் கதையைக் கூறும் சிவராத்திரி புராணம் ஈழமணித்திருநாட்டில் சுன்னாகத்திலே தோன்றிய பிரமஸ்ரீ. வரதபண்டிதர் அவர்களால் செய்யுளாகச் செய்யப்பட்டது. அதற்கு உரைவகுத்த குமாரசூரியப் பிள்ளை அவர்களும் அதனைப் பதிப்பித்த பிரமஸ்ரீ சோமசுந்தர ஐயர் அவர்களும் ஈழநாட்டினரே. ஆதலால், ஈழநாட்டுக்கும் சிவராத்திரிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

ஈழநாட்டிலுள்ள ஒவ்வொரு திருத்தலங்களிலும் சிவராத்திரி பூசை நடைபெறுகிறது என்றால் அது மிகையாகாது. அத்திருத்தலங்களில் எல்லாம் அடியார்கள்

புராணபடனம், ஆராதனை முதலியன செய்து கண்விழித்திருந்து எம்பெருமானை வழிபட்டு வருகின்றனராயினும் பாலாவியின் கரையிற் கோயில் கொண்ட கேதீச்சரநாதன் கோவிலில் இவ்விழா ஆண்டுதோறும் மகோந்நதமாக நிகழ்கிறது. இலங்கை அடங்கிலுமுள்ள சைவ அன்பர்கள் ஆங்குச் சென்று கண் விழித்திருந்து ஆராதனை புரிந்து எம்பெருமான் அருள் பெற்றுச் செல்வர். அத்தகைய நன்னுள் 23–2–71 செவ்வாய்க்கிழமை வருகிறது. அப்புண்ணிய தினத்தில் அடியார்களின் உபயோகத்துக்காக யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் திரு. மு. கணபதிப்பிள்ளை தமது ஜெனன பதியிற் கோயில் கொண்ட வள்ளைக்குள விநாயகன் திருத்தாளை வணங்கி அவனருளாற் தாம் புதுக்கிப்பதிப்பித்த சிவராத்திரி புராணத்தை வெளியிட இருக்கிருர்கள் என்பது அடியார்களுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவமாகும்.

''எம்பெருமான் திருவடி வாழ்க.''

உ

# சிவனுக்கு ஓர் இரா


சித்தாந்தப் புலவன்

[ வித்துவான் க. ந. வேலன் B. O. L. ]


உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும் வாழ்க்கையில் உண்ணாமையும் உறங்காமையும் தத்துவங்களாக உபதேசிக்கப்பட்டன; உண்ண, உண்ண ஆசை தீராமையும் உறங்க உறங்கக் களைப்புத் தீராமையும் அனுபவமாயின. "உண்டுண்டு உறங்குவதைக் கண்டதேயல்லாமல் ஒரு பயனடைந்திலேனே" என்ற அங்கலாய்ப்பு ஆன்மவளர்ச்சியிற் பெறும் ஒரு பேரனுபவமாகும், ஒரு பயனடைந்திலேனே என்னும் போது உண்பதனாலும் உறங்குவதனாலும் பெரும்பயனடையலாமென எண்ணி உண்டேன் உறங்கினேன். ஆனால் ஒருசிறிய பயனையுமடைந்திலேனே என்ற பொருளும் ஒப்பற்ற பயனாகிய இறைமையையடைந்திலேனே என்ற குறிப்பும் உடன் தோன்றுகின்றன.

சீவர்க்குரிய பல இரவுகளில் ஓர் இரவைச் சிவனுக்காக்கினர் நம்முன்னோர்; அவ்விரவே சிவராத்திரி. இரவு இன்பத்திற்குரிய குறுஞ்சிப் பொழுது; சிற்றின்பமாகிய சீவ அனுபவத்திற்கு மாத்திரமல்ல, பேரின்பமாம் சிவ அனுபவத்திற்கும் உரிய பொழுது அதுவாகும். அவ்விரவில் சிவனை அநுபவித்தவர் பலர், இன்றும் பலர் உளர். அவ்வனுபவத்தை உணர்த்துவதே நம் ஈழத்துப் புலவர் வரதராசகவிராசர் இயற்றிய சிவராத்திரி புராணம்;

''கனிதந்தால் கனியுண்ணவும் வல்லீரோ'' என்ற வினா நினைவில் எழுகின்றது. தமிழ் மக்களிற் பலர் கனி விருப்பக்காய் கவரும் கள்ளமுடையராயினர், கனியுண்ணும் வல்லமையற்றவராயினர். இருப்பினும் மறவன் புலோ மு. கணபதிப்பிள்ளை அவர்கள் மீண்டும் கனிவழங்கியுள்ளார். தமிழகம் விருந்துண்டு பயன் எய்துமாக.

# சிவராத்திரி புராணப் பதிப்பு வாழ்த்துரை

## திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் B. A.

சுன்னாகம் மகாகவி வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணம் என்னும் நூல் தமிழறிஞர் உடுப்பிட்டி திரு. ம. குமாரசூரியப்பிள்ளை அவர்களுடைய சிறந்த உரையோடு ஸ்ரீ காந்தா அச்சக அதிபர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் நன்முயற்சியால் இப்போது வெளிவந்துள்ளது. இந்நூல் எத்துணைச் சிறப்போடு அச்சிட முடியுமோ அத்துணைச் சிறப்போடு அச்சிடப்பட்டுக் கண்கவர் வனப்புமிக்கு மிளிர்கின்றது. நூலைப் படிப்பவர்களுக்கு உபயோகப்படும் வகையில் நூலாசிரியர் வரலாறும், உரையாசிரியர் வரலாறும் செவ்வனே அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்துப் புலவர்களது நூல்கள் அருகிப் போகும் இக்காலத்தில் அவற்றை வெளியிடும் பெரும் பணியில் மிக்க ஆர்வத்தோடு தொண்டு புரியும் பிள்ளை அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

# இத்தகைய நூல்கள் இன்றியமையாதன

[பண்டிதர் த. சுப்பிரமணியன் அவர்கள்]

---

எண்ணரிய பிறவிகளிற் புனிதப் பிறவி மனிதப் பிறவியாகும்.

மனிதர்கள் நன்மை, தீமை என்பனவற்றை உணர்ந்து நல்வழி வாழ்ந்து உய்யும் பொருட்டு இறைவன் அருளிய கலைகள் பதினெட்டு என அறிஞர் கூறுவர்.

அவையாவன: வேதம் நான்கு; வேதாங்கங்கள் ஆறு; உபாங்கங்கள் நான்கு; உபவேதங்கள் நான்கு என்பனவாகும்.

இவற்றுட் புராணம் என்பது உபாங்கம் என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும்.

புராணம் என்னுஞ் சொல், பழமையுடையது என்னும் பொருட்டு அதனை இங்குப் பழமை சான்ற வரலாறுகளைக் கூறும் நூலுக்கேற்றி வழங்குவர்.

வேதாகமங்களிலேயுள்ள உட்பொருள்களையெல்லாம் பூதக் கண்ணாடி போல விரிவுபடுத்தி எவரும் விளங்கும் பொருட்டுக் கதைகளாக அமைந்துள்ளனவே புராணங்கள்.

அமிழ்தனைய நந்தமிழ் மொழியிற் தோன்றிய சிவபுராணங்களுட் சிவராத்திரிப் புராணமும் ஒன்று.

அது மிக மிக மேலானது. சிவபெருமானுக்குரிய சிறப்பான சிவராத்திரித் தினத்தின் பெருமையை விளக்கிக் கூறும் மகிமை வாய்ந்தது.

விண்ணுலகத்தவரும், மண்ணுலகத்தவரும் சிவபிரானை வழிபட்டு உய்தியடைய வழிகாட்டுவது.

இத்தகைய புராணங்களைக் கற்றல், பொருள் விரித்தல், விரிக்கக் கேட்டல், அச்சிட்டு வெளியிடுதல் என்பன சிறந்த சிவபுண்ணியங்களாகும்.

"தாமின் புறுவ துலகின் புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்னும் வள்ளுவர் வாக்குக் கமைய நண்பர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்; சைவ மக்களின் ஆன்ம ஈடேற்றங் கருதி இப் புராணத்தை வெளியிட முன்வந்தமை மிக மிகப் பாராட்டக் கூடியதாகும். முன்னர் சிவஞான போதம் திருக்கேதீச்சரம் என்னும் நூல்கள் வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சமய ஞானங் குன்றிவரும் இக்காலத்து இத்தகைய நூல்கள் பல இன்றியமையாதன எனக் கூறவேண்டுவதில்லை.

அன்னாரின் இத்தகைய சேவையைச் சைவ உலகும், ஏற்றுப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

இந்தச் சிறந்த நூலை ஆதரித்து, மேலும் இத்தகைய நூல்கள் பல வெளியிட ஆசிரியர் அவர்களை ஊக்கப்படுத்துதல் சைவ மக்களின் நீங்காத கடமையாகும்.

சுபம்.

# நாவலர்வழி வந்த நற்பணி

[சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்கள்]

தமிழ் மொழியிலுள்ள பழைய நன்னூல்களிலே பேரபிமானமும், அந்நூல்களைப் பாதுகாப்பதிலே பேரார்வமும் யாழ்ப்பாணத்தவர்களுக்கே சிறப்பாய் அமைந்த இயல்புகள்.

தமிழ் நூல்கள் ஏட்டுச் சுவடிகளாய் இருந்த காலந் தொட்டு இற்றைவரை இவ்வியல்புகள் வாழையடி வாழையாக வளர்ந்து வருவது எமக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிகின்றது.

சென்ற நூற்றாண்டின் ஆரம்ப காலம் ஏட்டுச் சுவடிக் காலம் — தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அச்சுவடிகள் "சீரழிந்து கெட்டுச் சிதைந்து நிரைமாறிப் — பேரழிந்து பூஞ்சு பிடித்துப் பிடியாகி — முன்பின் முரணி முழுதும் புழு உழுது — கம்பை நடுமுரிந்து, கட்டுவிட்டுச் சிதறி — மூலைக்கு மூலை மடங்கி முடங்கி," எடுப்போரும் அடுப்போரும் இன்றி மண்ணுக்கு இரையாகிக் கிடந்த காலம்; இப்போது அச்சிற் கிடைக்கும் பல இலக்கண இலக்கிய சமய நூல்களின் பெயர் தானும் அறியப்படாமல் இருந்த காலம்; எட்டுத் தொகையுள் அடங்கியுள்ள நூல்கள் இன்னவையென்று அறியாக் காலம்; சிலப்பதிகாரமா அல்லது சிறப்பதிகாரமா என மயங்கிக் கொண்டிருந்த காலம்;

அக்காலத்திலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே அவதரித்து தமிழ் நாடெங்கணும் மெய்யறிவுறுத்திய ஆசாரியரும் மகாவித்துவ சிரோமணியுமாய்த் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள். அவர்களால் ஏட்டுச் சுவடிகள் பல பரிசோதனஞ் செய்யப்பட்டுத் திருத்தமான முறையிலே அச்சுப் பிரதிகளாக வெளியிட்டமை உலகப் பிரசித்தம்.

நாவலர் அவர்களைத் தொடர்ந்து அந்நூற்றுண்டின் இறுதிக் காலத்திலே தமிழ் நூல்களிற் சிறந்தவை அனைத்தையும் பரிசோதித்துப் பதித்துத் ''தமிழ்த்தந்தை'' ஆனவர் இராவ் பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள். பிள்ளையவர்களும் யாழ்ப்பாணத்தவரே. பிள்ளையவர்களுக்குப் பின் — இந்நூற்றுண்டின் முற்பகுதிவரை வாழ்ந்து பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துப் பாதுகாத்தவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதஐயரவர்கள்.

இம் மூவர் பெருமக்களாலும் இவர்களது காலத்தவரான பிறராலும் பதிக்கப்பெற்ற நன்னூல்களெல்லாம் இன்று காண்டற்கும் அரியனவாயின. சென்ற நூற்றுண்டின் முற் பகுதியிலே ஏடுகள் கிலமடைந்து இருந்தமை போல, இன்று அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் அந்நூல்களும் தேடுவாரும் படிப்பாருமின்றி ஓரஞ் சிதைந்தும் இதழ் கிழிந்தும் இராமபாணத்தின் வாய்ப்பட்டும், செல்லரித்தும் அழிந்தொழிகின்றன. அவற்றுள் ஓரளவு நன்னிலையில் இருப்பனவும் பலசரக்கு வியாபாரிகள்பால் அடைந்து சரைகளாகவும் உறைகளாகவும் திரிகின்றன. வியாபாரத்தையும் அதன்மூலம் வரும் இலாபத்தையும் கருத்திற்கொண்ட பதிப்பாளர்கள் தாம் பழைய நூல்களைப் பதிப்பிப்பதாகக் கனவிலுங் காண்பதில்லை. அந்நூல்களில் அபிமானமுடையவர்களாய் இருப்

பவர்களிடத்திலே பதிப்பதற்கான கடதாசி வாங்கவும் பணம் இருப்பதில்லை. அவர்கள் ஒருவாறு உடைமைகளை விற்றோ, கடன்பட்டோ பதிப்பித்தாலும் பல பிரதிகள் அன்பளிப்பாகப் போகுமேயன்றிச் சில பிரதிகள் தானும் விற்பனையாவதில்லை.

இந்நிலையிலே நாவலர் பெருமான் முதலான மூவரது சைவத் தமிழ்த் தொண்டின் வழிநின்று இலாபத்தைச் சற்றேனும் கருதாமல், சைவசமயத் திருத்தொண்டு ஒன்றை மாத்திரமே கருதி சுன்னுகம் பிரம ஸ்ரீ வரத பண்டிதர் அவர்களால் அருளிச் செய்யப்பட்ட சிவராத்திரி புராணம் என்னும் ஒப்பற்ற சிறந்த நூலை உரையுடன் பதித்து வெளியிடும் சைவாபிமானி உயர்திரு மு. கணபதிப்பிள்ளையவர்களுக்குச் சைவ உலகம் பெரு நன்றிக் கடப்பாடுடையது.

பிள்ளையவர்கள், மறுபதிப்பின்றி மறையும் கந்த புராணவுரை முதலிய பல நூல்களைப் பதித்து உபகரிக்க வேண்டும் என்னும் நோக்கமுடையவர்கள். அவர்கள் ஏனைய நூல்களையும் பதித்துப் பாதுகாப்பதற்கு ஆர்வங் கொள்ளுமாறு ஆதரவு நல்கி, நாவலர் வழிவந்த நற் பணியை ஓம்புவோமாக.

யாழ்ப்பாணம்

## ஸ்ரீ காந்தா அச்சக இலவச வெளியீடுகள்

## 1953 — 1970

1. திருக்கோவிலிலும் திருவீதியிலும்
செய்யத் தகாத குற்றங்கள்.
[வண்ணை வைத்தீஸ்வரன் தேர்விழாவில் விநியோகம்]

2. கந்நரநுபூதி
[கதிர்காமம் வருஷப்பிறப்புத் திருவிழாவில் விநியோகம்]

3. தோத்திர மஞ்சரி [ஆனி உத்தர தினத்தில்]

4. கந்தரநுபூதி
[கதிர்காமம் ஆடித்திருவிழாவில் விநியோகம்]

5. சுன்னாகம்
செல்லாச்சி அம்மையார் நினைவு மலர்
[அம்மையாரின் குருபூசைத் தினத்தன்று விநியோகம்]

6. முருகன் பிரார்த்தனை [நவராத்திரி நாளில்]

7. வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஊஞ்சல்
[ஷை ஆலயத் திருவூஞ்சலின்போது விநியோகம்]

8. தோத்திரமாலை
[வண்ணை—விசுவேசப்பிள்ளையார் திருவூஞ்சலின்போது]

9. கந்தரநுபூதி
[நல்லூர்த் தேர்த்திருவிழாவின்போது விநியோகம்]

10. சிவஞானபோதம் [யாழ்—சைவபரிபாலன சபை
ஆதரவில் நடந்த சைவ மகாநாட்டில் விநியோகம்]

11. சகலகலாவல்லிமாலை [நவராத்திரி நாளில்]

12. சிவபுராணம் [ஐப்பசித் திங்களில் விநியோகம்]

13. கதிர்காமத் திருமுருகன் கீர்த்தனங்கள்
[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிலைவிழா 29–6–69 விநியோகம்]

14. ஸ்ரீ அருணாசல அக்ஷர மணமாலை
[செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தில் — 1970]

---

அச்சிட்டுப் பிரசுரித்தவர்: மூ. கணபதிப்பிள்ளை
ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.